Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

16.04.2020 வியாழக்கிழமை

## பாதிப்பு 2,100,000 இறப்பு 136,000

வுகான், ஏப். 16
கொரோனாவால் உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 21 லட்சமாக அதிகரித்தது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 36 ஆயிரமாக அதிகரித்தது. பக்.2

## கே.கே.எஸ் தனிமைப்படுத்தல் முகாமில்

# எஞ்சியோருக்கும் கொரோனா?

### வாய்ப்பு அதிகம் என்று பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 16
காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் நிலையத்தில் எஞ்சியுள்ளோருக்கும் கொரோனா தொற்று இருக்கக் கூடும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். பக்.2

## கொரோனா தொற்றாளர்கள் இரணவிலவுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 16
காங்கேசன்துறையிலுள்ள தனிமைப்படுத்தல் மையத்தில் கொரோனா தொற்று கண்டுபிடிக்கப்பட்ட இருவரும் இன்றைய தினம் சிலாபம் இரணவில மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (ஓ,5)





## மருத்துவமனைக்கு வருவோர் குறைவு

### பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 16
சாதாரண நாள்களில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளில் மூன்றிலொரு பகுதியினரே தற்போது வருகின்றனர். இவர்களுக்கு கொரோனா தொற்றாளர்களுடனான தொடர்பு பற்றி பக்.2

## ஊரடங்கை நீக்க வேண்டாம்!

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 16
கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் குறைவடைந்துள்ளதைக் கருத்திற் கொண்டு ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்த அரசு நடவடிக்கை எடுக்கக் கூடாது. ஊரடங்கு தளர்த்தப்படுமாயின் பக்.2

## 15 மாவட்டங்களில் கொரோனா; கொழும்பில் 49 பேருக்கு தொற்று

### தனிமைப்படுத்தல் நிலையங்களில் 38 பேர்

கொழும்பு, ஏப். 16
இலங்கையில் இதுவரை 15 மாவட்டங்களில் 238 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அதிகளவாக கொழும்பு மாவட்டத்திலேயே 49 பேர் பாதிக்கப் பக்.2

## 2ஆம் கட்ட சோதனைகள் வடக்கில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 16
யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்து ஏனைய மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு கொரோனா தொற்றுத் தொடர்பான இரண்டாம் கட்டச் சோதனைகள் நாளை ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி பக்.2

## யாழில் ஊரடங்கைத் தளர்த்த உடனடிச் சாத்தியமில்லை

### ஆபத்துக் குறைந்த பிரதேசங்களில் விரைவில் தளர்த்தப்படலாம்

யாழ்ப்பாணம், ஏப். 16
யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்கை உடனடியாகத் தளர்த்த வாய்ப்பில்லை. ஆனாலும் மாவட்டத்தில் ஆபத்துக் குறைந்த பிரதேச செயலர் பிரிவுகளான மருதங்கேணி, தீவகம், தென்மராட்சி போன்ற இடங்களில் பரிசோதனை முடிவுகளைப் பொறுத்து ஊடரங்குச் பக்.2

## திங்கள் முதல் அரச பணியாளர்களுக்கு வேலை!

### அமைச்சர் சமல் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 16
ஏப்ரல் 20 ஆம் திகதியின் பின்னர் தொடர் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் அரச ஊழியர்களில் 20 சதவீதமானோரை வேலைக்கு அழைக் பக்.2

## யாழ்ப்பாணத்தில் சமூகமட்டச் சோதனைகளை நடத்த 400 பரிசோதனை பொருள்கள்

யாழ்ப்பாணம், ஏப். 16
சமூகமட்டத் தொற்றுத் தொடர்பில் விரைவாகப் பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதியால் வடக்கு மாகாணத்துக்கு 400 பரிசோதனைப் பொருள்கள் வழங்கி பக்.2



கொரோனாவால்

## பிரான்ஸில் இன்னொரு யாழ்ப்பாணத்தவர் சாவு!

யாழ்ப்பாணம், ஏப்.16
கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மற்றுமொருவர் பிரான்ஸில் நேற்று உயிரிழந்துள்ளார். பக்.2

## ஊரடங்குச் சட்டத்தை நீக்க கோத்தா தீவிர ஆலோசனை



கொழும்பு, ஏப்.16
ஊரடங்குச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பில் சுகாதாரத் துறையினர் ஆராய்ந்து வருகின்றனர். அவர்களின் பரிந்துரை கிடைத்ததும் ஜனாதிபதி உரிய தீர்மானத்தை எடுப்பார் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். ஊரடங்குச் சட்டம் அடுத்தவாரம் முதல் கட்டம் பக்.2

# ஊரடங்கை....

இதுவரை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் தனிமைப்படுத்தலின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. கொரோனா பரவும் தன்மை குறைவடைந்துள்ளதாகவும், தற்போது அபாயக்கட்டத்தை கடந்துள்ள காரணத்தால் பல பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு நிலைமைகளை வழமைக்கு கொண்டுவர வேண்டும் என சுகாதார பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் அதற்கு மாற்றுக் கருத்தாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமந்த ஆனந்த இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
கொரோனா தொற்றுப்பரவல் ஏனைய நாடுகளைப் போல எமது நாட்டில் பரவவில்லை என்பது உண்மையே. ஏனைய நாடுகள் அனைத்திலும் ஆயிரக்கணக்கில் மக்கள் உயிரிழந்து வருகின்ற நிலையில் எமது நாட்டில் இதுவரை ஏழுபேர் மாத்திரமே உயிரிழந்துள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்களும் குறைவாகவே உள்ளனர். எமது மருத்துவ நடவடிக்கைகள் உயரிய மட்டத்தில் உள்ளன. ஆனால் அதற்காக இப்போதே அனைத்தையும் கைவிட்டுவிட முடியாது. கொரோனா என்பது ஏனைய நோய்களைப் போல் கருதப்படக்கூடிய ஒன்றல்ல. இப்போது மிகக் குறைவாக தொற்றுப் பரவல் காணப்பட்டாலும் அடுத்த சுற்றுகளில் இது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இப்போது முன்னெடுக்கும் இறுக்கமான சட்ட நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்தாக வேண்டும். இதில் ஊரடங்குச் தொடர்ந்தும் பிறப்பிக்கப்பட வேண்டியது கட்டாயமானதாகும். ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டதன் காரணமாகவே எம்மால் நிலைமைகளை சரிவரக் கையாள முடிந்தது. ஆகவே இப்போது ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படும் என்றால் மீண்டும் நாட்டில் கொரோனா பரவல் அதிகரிக்கும். அவ்வாறு ஊரடங்கை தளர்த்த வேண்டுமாயின் இப்போது கொரோனாத் தொற்றுள்ள அடையாளம் காணப் பட்டுள்ள நபர்களையும் அவர்களுடன் தொடர்புகளை பேணிய ஏனைய நபர்களையும் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில் வைத்து அவர்களை மேலும் பரிசோதனை செய்து அவர்கள் ஆரோக்கியமான நிலையில் உள்ளனர் என்பதை உறுதிப்படுத்திய பின்னரே ஊரடங்கை தளர்த்த வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறோம் என்றார். (ஒ,5)

# எஞ்சியோருக்கும்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இன்று காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் நிலையத்தில் மதபோதகருடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய 20 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களில் 16 பேருக்கு இதுவரை தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய 4 பேருக்கும், நாளை சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. அவர்களுக்கு கொரோனா தொற்று இருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம். இவர்களுக்கு தொற்று எப்படி ஏற்பட்டுள்ளது என்பதை உறுதியாகக் கூற முடியாது. இருப்பினும் நாளைய சோதனையில் கொரோனா தொற்று இல்லை என்றாலும், அவர்களுக்கு கிரமமாக தொடர்ந்து சோதனை முன்னெடுக்கப்படும், என்றார். (ஒ,5,20,105)

# மருத்துவமனைக்கு

விசாரித்த பின்னர் சிகிச்சையளிக்கப்படுகின்றது. இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இன்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சாதாரண நாள்களில் கிளினிக்குகளுக்கு 2 ஆயிரத்து 500 பேர் வருவார்கள். தற்போது 500 தொடக்கம் 700 பேர் வரையிலே வருகின்றார்கள். சாதாரண நாள்களில் விடுதிகளில் தங்கி ஆயிரத்து 200 பேர் சிகிச்சை பெறுவார்கள். ஆனால் தற்போது 300 பேர் வரையிலே தங்கிச் சிகிச்சை பெறுகின்றார்கள்.
மருத்துவமனைக்கு வராத கிளினிக் நோயாளர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களுக்குரிய மருந்துகள், மருத்துவபீட மாணவர்களின் உதவியுடன் தபால் திணைக்களத்தின் ஊடாக அனுப்பி வைக்கப்படுகின்றது, என்றார். (ஒ.5,20,105)

# 2ஆம் கட்ட சோதனைகள்

ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணம் மாவட்டம் தவிர்ந்த வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களிலும் உள்ள 26 பேர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கு முதல் கட்ட கொரோனா சோதனைகள் நடத்தப்பட்டிருந்தன. எவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த நிலை யில் இரண்டாம் கட்டச் சோதனைகள் நாளை ஆரம்பிக்கப்படவுள்ளன, என்றார். (ஒ,5)

# பாதிப்பு 2,100,000

சீனாவின் வுகான் மாகாணத்தில் பரவிய கொரோனா வைரஸ் தற்போது பேராபத்தான நிலையைத் தோற்றுவித்துள்ளது. நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 8 ஆயிரம் பேர் இந்த வைரஸால் உலக அளவில் உயிரிழந்துள்ளனர். சுமார் 85 ஆயிரம் பேர் புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 21 லட்சமாக அதிகரித்தது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 36 ஆயிரமாக அதிகரித்தது. (ம)

# ஊரடங்குச் சட்டத்தை நீக்க..

கட்டமாக நீக்கப்படவுள்ளது என்று வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் வினவிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,
கொரோனா விவகாரத்தில் விசேட வைத்தியர்கள் உட்பட சுகாதாரத் துறையினரிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று, அவற்றை அடிப்படையாகக் கொண்டே ஜனாதிபதி தீர்மானங்களை எடுக்கின்றார். ஊரடங்கு உத்தரவின் போது பல தரப்புகளினதும் கருத்துகள் உள்வாங்கப்படுகின்றன. இதன் காரணமாகவே இலங்கையில் கொரோனா வைரஸ் வேகமாக பரவுவதைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கின்றது.
இந்த விவகாரம் தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் மற்றும் சுகாதார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி பரந்துபட்ட கலந்துரையாடலை நடத்தியிருந்தார்.
ஊரடங்குச் சட்டத்தை தளர்த்துவது, நீக்குவது தொடர்பில் சுகாதார அமைச்சின் நிலைப்பாட்டை, கருத்தை விஞ்ஞானபூர்வமாக அறிவிக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளார். அதற்கான நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.சுகாதாரத் துறையின் பரிந்துரை முன்வைக்கப்பட்டதும் அது உட்பட அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு ஜனாதிபதி முடிவை அறிவிப்பார்- என்றார். (க-44)

# யாழில் ஊரடங்கைத் தளர்த்த..

சட்டம் தளர்த்தப்படுவதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.
இந்தச் சந்திப்புத் தொடர்பில் கேதீஸ்வரன் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண மாவட்டத்தில் 17 நோயாளிகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். சமூக மட்டத்தில் 320 பேர் கண்காணிக்கப்படுகின்றனர். வெளிநாடுகளில் இருந்து வந்த ஆயிரத்து 200பேர் கண்காணிக்கப்படுகின்றனர். அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சமூக மட்டத்தில் கண்காணிக்கப்படும் 320 பேரில் 140 பேருக்கு இதுவரை பரிசோதனைகள் நடாத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் சண்டிலிப்பாய் பகுதியில் 16 பேருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பரிசோதனைகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டு, முழுமையாக சமூக மட்டத்தில் ஆபத்தில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னராக ஆளுநர், மாவட்ட செயலர் உள்ளிட்ட பொறுப்புவாய்ந்த தரப்புக்களுடன் கலந்து பேசி யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு உள்ளிட்ட கட்டுப்பாடுகளை தளர்த்தலாமா? தளர்த்தகூடாதா? என்ற தீர்மானத்தை அடுத்துவரும் சில நாள்களில் எடுக்கவுள்ளோம். (ஒ,5,20)

# திங்கள் முதல்....

கவும் அச்சுறுத்தல் இல்லாத மாவட்டங்களில் 50 சத வீத ஊழியர்களை தொழிலில் ஈடுபடுத்தவும் அரசு தீர்மானித்துள்ளது. தனியார் துறையினர் ஆரோக்கியமான விதத்தில் நடவடிக்கை எடுக்கவும் அரசு வலியுறுத்தியுறுத்துவதாக அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் நிலைமை தற்போது முன்னேற்றகரமாக உள்ளது. சுகாதார வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. அது ஒருபுறம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நாட்டின் தேசிய பொருளாதாரம் குறித்து கவனம் செலுத்தியாக வேண்டும். எதிர்வரும் 20 ஆம் திகதியின் பின்னர் தொடர் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள மாவட்டங்களான கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அரச பணியாளர்களில் 20 சதவீதமானவர்களை வேலைக்கு வரவழைத்து நிறுவனங்களை இயக்குவதெனவும் அதேபோல் கொரோனா தொற்றுப்பரவல் அச்சுறுத்தல் குறைந்த ஏனைய வெளி மாவட்டங்களில் தொழிற் சாலைகள், நிறுவனங்கள் மற்றும் ஏனைய தொழில்களுக்கு 50 சதவீதமானவர்களை தொழிலில் ஈடுபடுத்தவும் அரசு தீர்மானித்துள்ளது- என்றார். (ஒ,5)

# 15 மாவட்டங்களில் கொரோனா..

பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு இன்று மதியம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
அதேவேளை, களுத்துறை மாவட்டத்தில் 45 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 35 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 28 பேரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 பேரும், கண்டி மாவட்டத்தில் 07 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 05 பேரும், குருநாகல், கேகாலை, மாத்தறை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தலா 2 பேரும், காலி, மட்டக்களப்பு, பதுளை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் தலா ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பியவர்களைத் தனிமைப்படுத்தும் நிலையங்களிலிருந்து 38 பேரும், இலங்கை வந்திருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் 03 பேரும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-22)

# யாழ்ப்பாணத்தில் சமூகமட்டச்....

வைக்கப்பட்டுள்ளதாக, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதியுடனான சந்திப்பில் சமூக மட்டத்தில் தொற்றுள்ளதா? என்பதை விரைவாக உறுதிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. இதற்காக விரிஎம் எனப்படும் பரிசோதனை கருவிகள் 400 வடமாகாணத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக வடமாகாணத்தில் 400 பேருக்கு பரிசோதனை மேற்கொள்ள முடியும்- என்றார். (ஒ,5)

# பிரான்ஸில்...

சங்கானையைச் சொந்த இடமாகக் கொண்ட மூன்று பிள்ளைகளின் தந்தையான தெய்வேந்திரன் நவரத்தினம் (வயது 52) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். பிரான்ஸ் வில்னெவ் சென் ஜோர்ஜ் எனுமிடத்தில் வசித்து வரும் குறித்த நபர் கொரோனா அறிகுறிகளுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.கொரோனா வைரஸ் தாக்கமே அவருடைய இறப்புக்குக் காரணம் என்று மருத்துவர்கள் உறவினர்களுக்கு அறிவித்தனர்.



## பொலிஸ் நிலையத்தில் தொற்று நீக்கி விசிறல்

யாழ்ப்பாணம், ஏப். 16

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் கிருமித் தொற்று நீக்கி மருந்து இன்று காலை விசிறப்பட்டது.

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் இன்று காலை யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிநடத்தலில் பொலிஸ் நிலைய வளாகத்தில் தொற்று நீக்கி விசிறப்பட்டது. (த-20)

# நாட்டை நாசமாக்க நாம் தயாரில்லை!

## சஜித் தெரிவிப்பு

மக்களின் கண்ணீருக்கு மத்தியில் தேர்தலை நடத்தி நாட்டைச் சீரழிக்க எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் தயாராக இல்லை. நாடாளுமன்ற ஜனநாயகத்தை விட நாட்டு மக்களின் பாதுகாப்பான வாழ்வுக்கு முன்னுரிமையளிக்கத் தேவையில்லையா? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், அது தொடர்பில் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் வகையில் தனது பேஸ்புக் பக்கத்தில் அவர் வெளியிட்ட விசேட காணொலிப் பதிவிலேயே இதனைத் தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

“ உண்மையில் இந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் கொரோனா வைரஸ் வெகுதுரிதமாகப் பரவக்கூடிய



அபாயகரமான நிலைமையே தற்போது காணப்படுகின்றது. இதுவரையில் சுகாதாரத்துறையினரும் பாதுகாப்புத்துறையினரும் அனைத்து அரச திணைக்களங்களும் மரணங்களைக் குறைத்து கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது. இந்நிலையில் தேர்தல் நடத்தப்பட்டால் கிடைக்கப் பெற்ற இந்த வெற்றிகள் அனைத்தும் காட்டிக் கொடுக்கப்படும்.

அதனால் நாடாளுமன்ற ஜனநாயகத்தை மதிக்கும் தேர்தலை மதிக்கும் தேர்தல்களுக்கு முகங்கொடுப்பதற்கு தயக்கமற்ற நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டின் மனித வளத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பதையும் அதே போன்று கொரோனா வைரஸைத் தோற்கடிப்பதையுமே எமது பிரதான இலக்காகக் கொண்டுள்ளோம். மனித வாழ்க்கையை அபாயத்துக்குள் தள்ளி தேர்தலை நடத்துவது பொருத்தமல்ல. தேர்தல் நடைபெறும்போது சமூக இடைவெளி பேணப்படமாட்டாது. தேர்தலை நடத்துவதற்காகச் செயற்படும் பொது மக்களும் அரச அதிகாரிகளும் பாரதூரமான நிலைமைக்குத் தள்ளப்படுவர். கொரோனா வைரஸை முழுமையாகத் தோல்வியடையச் செய்வதே அந்தச் சவாலாகும். நாம் எமது கவனத்தை வேறு விடயத்தில் செலுத்தத் தயாராக இல்லை. அந்த இலக்கைப் புறந்தள்ளி சில அரசியல் ஒழுங்கு நிரலுக்கு ஏற்ப மக்களின் வாழ்க்கையை ஆபத்தில் இட்டுத் தேர்தலுக்குச் செல்ல முடியாது. இதனை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம் என்றுள்ளார். (ப-22)

## வவுனியாவில் ஹெரோய்னுடன் இருவர் கைது

வவுனியா, ஏப். 16

வவுனியாவில் ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து வவுனியா பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி ஆர்.கே.சீ.ரி.ரத்னாயக்கவின் நெறிப்படுத்தலில் வவுனியா போதைப் பொருள் தடுப்பு பிரிவுப் பொலிஸார் மன்னார் வீதி, பாலமைக்கல் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இருவரைச் சோதனைக்குட்படுத்தினர். இதன்போது 25 வயது இளைஞரிடமிருந்து 5 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும், 42 வயது நபர் ஒருவரிடம் இருந்து 40 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருளும் மீட்கப்பட்டன. இதனையடுத்து குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா, மன்னார் வீதி மற்றும் ஓமந்தைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். மேலதிக விசாரணை இடம்பெறுகின்றது என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.(த-18)

## யாழ். வருகிறார் கமல் குணரட்ண

யாழ்ப்பாணம், ஏப்.16

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. யாழ்ப்பாணம் வரும் அவர் வடக்கில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனாத் தடுப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராயவுள்ளார்.

விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தை வந்தடையவுள்ள பாதுகாப்புச் செயலாளர், யாழ்ப்பாணம் பலாலி பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தில் இராணுவ உயரதிகாரிகள் மற்றும் படை வீரர்களுடன் சந்திப்பையும் மேற்கொள்ளவுள்ளார். இதற்கான ஏற்பாடுகளை பலாலி பாதுகாப்பு படைகளின் தலைமையகம் மேற்கொண்டுள்ளது. ( ப-26,111)

## அதிகரித்த விலைக்கு பொருள்கள் விற்பனை

### 11 வர்த்தகர்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்ப்பாண மாவட்டத்தில் 35 வர்த்தக நிலையங்களில் நேற்றுப் புதன்கிழமை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் அத்தியாவசிய பொருள்களை கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த மற்றும் விலை குறிக்கப்பட்ட பொருள்களை அதிகரித்த விலைக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டுக்களில் 11 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வடமாகாண பதில் உதவிப் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட இணைப்பதிகாரியுமான ஏ.எல். ஜகுபர் சாதிக் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கொக்குவில். மல்லாகம், ஏழாலை. சுன்னாகம், ஆவரங்கால், பருத்தித்துறை உள்ளிட்ட இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் இரண்டு குழுக்கள் பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தன. சம்பா அரிசியை அரசின் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்ட கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர்கள் 7 பேருக்கும், பெரிய வெங்காயம் ஒரு கிலோ 150 ரூபாய் என்ற கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர் ஒருவருக்கு எதிராகவும் பொருள்களில் பொறிக்கப்பட்ட அதிகூடிய சில்லறை விலையிலும் பார்க்க கூடிய விலைக்கு விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு எதிராகவும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஓ,5)

## கத்திக்குத்தில் தம்பதி பலி

புத்தளம்,ஏப்.16

மனைவியை கத்தியால் குத்திய கணவன், பின்னர் அதே கத்தியால் தன்னைத் தானே குத்தி உயிரை மாய்த்துக் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் கற்பிட்டி தொரடியில் நேற்று நடந்துள்ளது.

3 பிள்ளைகளுடைய குறித்த தம்பதியரிடையே அடிக்கடி குடும்பத் தகராறு ஏற்பட்டுள்ளது. அதுவே கொலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில், கற்பிட்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-114)

## பெண் வேடமிட்டு திருட்டுக்கள் !

மட்டக்களப்பு,ஏப்.16

ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள காலப் பகுதியில் வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

வர்த்தக நிலையங்கள், வீடுகள், பாடசாலைகள் போன்ற இடங்களில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். மக்கள் நடமாட்டம் இல்லாத நேரங்களைப் பயன்படுத்தும் திருடர்கள், பெண்கள் அணியும் முழு நீள ஆடைகளை அணிந்து முகங்களை மறைத்து திருடும் காட்சிகள் கமராக்களில் பதிவாகியுள்ளன. இந்தத் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் முன்வர வேண்டும் என்று பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(க-150)

## இந்தியா சென்று திரும்பிய பெண்ணுக்குக் கொரோனா

கொழும்பு, ஏப்.16

கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தையைச் சேர்ந்த 58 வயதுடைய பெண்ணொருவர் கொரோனாத் தொற்றுடன் நேற்றிரவு அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கடந்த மாதம் இந்தியா சென்று நாடு திரும்பியவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து கொழும்பு 12, பண்டாரநாயக்க மாவத்தையின் ஒரு பகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இதேவேளை, அப்பகுதியில் வசிக்கும் சிலரைத் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-22)

## அதிக விலைக்கு பொருள்கள் விற்றால் உடனே அறிவிக்கவும்

நுவரெலியா, ஏப்.16

அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் தொடர்பில், 0770110054 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு முறையிடுமாறு, நுவரெலியா மாவட்டத்தின் விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

அரசாங்கம் நிர்ணயித்த கட்டுப்பாட்டு விலையையும் மீறி பொருள்களை விற்பனை செய்த வியாபாரிகளுக்கு எதிராக, கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் வியாபாரிகளுக்கு எச்சரித்துள்ளார். (ஐ-114)

## கொரோனா அச்சத்தால் நாகலக வீதி முடக்கம்

கொழும்பு, ஏப்.16

கொழும்பு 13, கிராட்ண்பாஸின் நாகலகம் வீதி அதி அபாயகர பகுதியாக அறிவிக்கப்பட்டு முடக்கப்பட்டுள்ளது என்று கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த வீதியில் வசிக்கும் போதைப்பொருள் பாவனையாளர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதையடுத்து அந்தப் பகுதி முடக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுடன் மேலும் பலர் அங்கு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதால் தேடுதல் நடவடிக்கைளை மேற்கொள்ள வசதியாக அந்தப் பகுதி முடக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஜாஎல சுதுவெல்லப் பகுதியில் இனங்காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளருடன் நெருங்கிப் பழகிய, கொழும்பு குணசிங்புர, வேல்லவீதி, கிரான்பாஸ் மற்றும் நாகலகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 100 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (க-114,22)

# சுதந்திரமான தேர்தலுக்கு இது உரிய தருணம் அல்ல

### ரஞ்சித் மத்தும பண்டார தேர்தல் ஆணையாளருக்கும் கடிதம்

கொழும்பு, ஏப்.16

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு இது பொருத்தமான தருணமல்ல என்று சுட்டிக்காட்டியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரா. இது குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள், பொதுச்செயலாளர்கள் கலந்துரையாடித் தீர்மானம் மேற்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவுக்கு அவர் கடிதமும் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போதைய சூழ்நிலையில் பொதுத்தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை என்பதால், தேர்தலை நடத்துவது தொடர்பில் உயர்நீதிமன்றத்திடம் அபிப்பிராயம் கோருமாறு நீங்கள் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஜனநாயகத்தை விரும்பும் அனைவரினதும் வரவேற்பைப் பெற்றமை இரகசியமன்று. தேர்தல் குறித்த உங்களது நிலைப்பாட்டை நாம் ஏற்றுக்கொள்வதுடன், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு இது பொருத்தமான தருணமல்ல என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். தற்போது வரையில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள அதேவேளை, தேர்தலை நடத்துவதாக இருப்பின் பெரும் எண்ணிக்கையானோரைத் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த வேண்டியிருக்கும். அது அவர்களது உயிருக்கு அச்சுறுத்தலாக அமையும். அதுமாத்திரமன்றி தற்போது தேர்தலுக்காகச் செலவிடப்படக்கூடிய நிதியை, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்துவதே மிகப் பொருத்தமானதாகும்.

இவற்றைக் கருத்திற்கொண்டு நீங்கள் அனுப்பி வைத்த கடிதத்துக்குப் பதிலாக ஜனாதிபதி செயலாளர், உங்களுக்கிருக்கும் அதிகாரங்களுக்கு அமைய புதிய திகதியை அறிவித்து தேர்தலை நடத்துமாறு கோரியிருக்கிறார். எனவே, இது குறித்து அனைத்துக் கட்சித்தலைவர்கள் பொதுச் செயலாளர்கள் கலந்துரையாடித் தீர்மானம் மேற்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ப-22)

## கொவிட் - 19 நிதியம் ரூ. 655 மில்லியனானது!

கொழும்பு, ஏப்.16

கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 655 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என்று அந்த நிதியத்தின் முகாமைத்துவக் குழு தெரிவித்துள்ளது.

கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தை முகாமைத்துவம் செய்யும் முகாமைத்துவக் குழு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஒன்றுகூடியபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

நிதியத்துக்கு பல்வேறு தரப்பிடமிருந்து நிதி உதவிகள் கிடைக்கப்பெற்று வருகின்றன. கொரோனா ஒழிப்புக்குத் தேவையான மருந்துகள், மருத்துவ ஆராய்ச்சி உபகரணங்கள் உள்ளிட்ட சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளுக்காக நிதி வழங்குதல், சுகாதாரத் துறையிலும் அத்தியாவசிய மக்கள் சேவைகளை வழங்குவோரினதும் சுகாதார பாதுகாப்பு, சிறுவர்கள், பெண்கள், குறைந்த வருமானம் பெறும் வயோதிபர்கள், மாற்றுத்திறனாளிகள், இடர்நிலைக்குள்ளாகக் கூடியவர்களுக்காக நிதித் தேவைகளை வழங்குவது என்பன இந்த நிதியத்தின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையின் 85737373 என்ற இலக்கத்தையுடைய கொவிட் 19 சுகாதார,சமூகபாதுகாப்பு நிதியத்துக்கு உள்நாட்டு வெளிநாட்டு எந்தவொருவருக்கும் அன்பளிப்புகளை அல்லது நேரடி வைப்புகளைச் செய்ய முடியும். சட்டபூர்வமான கணக்கின் மூலம் நிதியத்திற்கு செய்யப்படும் அன்பளிப்புகள் வரி மற்றும் வெளிநாட்டு நாணய சட்ட திட்டங்களில் இருந்து விலக்களிக்கப்படும். காசோலை, டெலிகிராப் ஊடாக நிதியினை வைப்பிலிட முடியும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப)

## ஹப்புத்தளையில் இன்று ஐவர் கைது

கொழும்பு, ஏப்.16

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கோடாவை வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹப்புத்தளை பெருந்தோட்டப் பகுதிகளில், இன்று மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன், இந்த ஐவரிடம் இருந்து கசிப்புத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும், கசிப்புப் போத்தல்களும் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த பொலிஸார் சந்தேக நபர்களை நீதிவான் மன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தனர். (ப-114)




## வங்கிகளுக்கு முன்னால் மக்கள் நீண்ட வரிசையில்

மட்டக்களப்பு, ஏப்.16

மட்டக்களப்பு மாவட்டம் உட்பட பல்வேறு மாவட்டங்களில் இன்று ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்ட நிலையில், கொக்கட்டிச் சோலை பகுதியில் அதிகளவான மக்கள் குழுமியிருந்தனர்.

சமூக இடைவெளியைப் பேணும் பொருட்டு குறித்த, மண்முனை தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் கிராமங்களில் அமைந்துள்ள விளையாட்டு மைதானங்களில் தற்காலிகச் சந்தைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. எனினும் வங்கிகளில் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகளவான மக்கள் நீண்ட வரிசையில் வீதிகளில் காத்திருந்தனர். (க)

# அனுமதியற்ற கடைகள் திறக்கப்பட்டால் 'சீல்'

## மட்டு. மாநகரசபை முதல்வர் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.16

கொரோனா அச்சுறுத்தல் காரண மாக முன்னெடுக்கப்படும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்ப டும் காலத்தில் அனுமதியளிக்கப் படாத வர்த்தக நிலையங்கள் திறக்கப்படுமானால் அவற்றைச் 'சீல்' வைக்கவேண்டிய நிலை யேற்படும் என மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவண பவன் எச்சரித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபையில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாளை (இன்று) தற்காலிகமாக ஊரடங்குச் சட்டமானது தளர்த் தப்படும் வேளையில் பொதுமக் கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை வழமை போன்று மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானம், கல்லடி சிவானந்தா விளையாட்டு மைதானம், ஊறணி சரஸ்வதி வித்தியாலய மைதானம் மற்றும் தாண்டவன் வெளி லீனியம் பூங்கா ஆகிய நான்கு இடங்களில் அமைக்கப் பட்டுள்ள சந்தைகளிலும், பல்பொருள் வணிகங்களிலும் கொள்வனவு செய்து கொள்ள முடியும். இந்த முன்னெடுப்பு களுக்குப் பொது மக்கள் பூரண ஒத்துழைப்புகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம். குறிப்பாக சமூக இடைவெளியைப் பின் பற்ற வேண்டும். இதேபோன்று அத்தியாவசிய பலசரக்குக் கடைகளும், மருந்தகங்களும், பழக்கடைகளும் தவிர்ந்த ஏனைய அனைத்துக் கடைகளும் தமது வியாபாரச் செயற்பாடு களை நிறுத்த வேண்டும். கடந்த முறை எமது கள விஜயத்தின் போதும் சில விடயங்கள் அவதா னிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக் கப்பட்டன. ஆனால் இந்த முறை அந்த நடவடிக்கைகள் மேலும் இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள் ளது. இதன்படி அரச அறிவுறுத் தல்களை மீறி வியாபாரங்களில் ஈடுபடும் வர்த்தக நிலையங்களை முத்திரையிடுவதற்கான (சீல்) அனுமதிகளையும், ஏற்பாடுகளை யும் பெற்றுள்ளோம். எனவே அறிவுறுத்தல்களுக்கு அமைய தங்களது வியாபாரங்களை மேற்கொள்ள வேண்டும் என வர்த்தக சமூகத்தினரைக் கேட்டுக்கொள்கின்றோம் -என் றார். (ப)

## சூறாவளியால் பாதிக்கப்பட்ட 58 குடும்பங்களுக்கு இழப்பீடு

வவுனியா,ஏப்.16

வவுனியா மாவட்டத்தில் மினி சூறாவளியால் பாதிக்கப்பட்ட 58 குடும் பங்களுக்கும் மாவட்ட இடர் நிவாரண சேவைகள் நிலையத்தின் ஊடாக இழப் பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த 8 ஆம் திகதி மாலை திடீரென மினி சூறாவளி ஏற்பட்டது. இதன்காரணமாக மாவட் டத்தின் பல பகுதிகளிலும் வீடுகளின் கூரைகள் சேதமடைந்ததுடன், வவுனியா கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் இடி மின்னல் தாக்கத்தால் இளம் குடும்பத் தலைவர் ஒருவரும் உயிரிழந்திருந்தார்.

இதில் வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிவபுரம் கிராம அலுவ லர் பிரிவில் 10 வீடுகளும், மரக்காரம் பளை கிராம அலுவலர் பிரிவில் 30 வீடுகளும், பம்பைமடு கிராம அலுவலர் பிரிவில் 5 வீடுகளும், செக்கட்டிப்புலவு கிராம அலுவலர் பிரிவில் ஒரு வீடும், வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் அவுரந்துலாவ கிராம அலுவலர் பிரிவில் 8 வீடும், வெண்கல செட்டிகு ளம் பிரதேச செயலக பிரிவில் சூடு வெந்தபுலவு கிராம அலுவலர் பிரிவில் 2 வீடுகளும், பாவற்குளம் படிவம் 2 கிராம அலுவலர் பிரிவில் ஒருவீடும் என 57 வீடு கள் பகுதியளவில் சேதமடைந்திருந்தன.

இவ்வாறு பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கும், மின்னல் தாக்கி உயிரிழந்த வரின் குடும்பத்துக்கும் இழப்பீடுகள் வழங்க மாவட்ட இடர் நிவாரண சேவைகள் நிலையத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள் ளன என்று தெரிவிக்கப்பட்டது.(ஐ-18)

## சிறுமி உயிர் மாய்ப்பு

திருகோணமலை,ஏப்.16

16 வயதுச் சிறுமி ஒருவர், தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார் என்று சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை சம்பூர் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. சம்பவத்தில் பவிசாலினி (16 வயது) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுமி தூக்கில் தொங்குவதைக் கண்டு உறவினர்கள் அவரை உடனடியாக மீட்டு மூதூர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் அவர் உயிரிழந்துள்ளார். மூதூர் பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (க-114)

## அடாது ஊரடங்கு போட்டாலும் விடாது குடிக்கும் மதுப்பிரியர்கள்

### உடல் நலத்தை கெடுக்காதீர் என்று சுகாதாரப் பணிப்பாளர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஏப். 16

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போ தைய அசாதாரண சூழ்நிலை யிலும் வடக்கு மாகாணத்தில் மதுப் பிரியர்கள் அதிக விலை கொடுத்து மதுபான வகை களை வாங்கிக் குடிக்கின்றனர். இவ்வாறு குடிப்பது, குடிப்பவரின் உடல் நலத்தைப் பாதிப்பதோடு குடும்பம் மற்றும் குடும்ப பொருளாதா ரத்தையும் பாதிக்கும் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கொரோனா நோயைக் கட்டுப் படுத்துவதற்கு நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் மதுப் பிரியர்கள் அதிக விலை கொடுத்து மதுபானம் வாங்கி அருந்துகின்றார்கள். இது அவர்களின் உடல் நலத்துக்குக் கேடு. அத்துடன் அவர்கள்



குடும்ப பொருளாதாரமும் பாதிக்கும். இப்படியான செயற்பாடுகள் நடைபெறுவ தாக எமக்குத் தெரியப்படுத் தப்பட்டுள்ளது.

ஆய்வின் படி புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்படு மாயின் அதன் பாதிப்பு மிக மோசமாக இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் இந்த சந்தர்ப்பத்திலாவது புகைப் பிடிக்கும் பழக்கத்தைக் கைவிட வேண்டும்- என்றார். (த-7)

## ஊரடங்கை மீறினரென நால்வர் கைது

வவுனியா, ஏப். 16

வவுனியாவில் ஊரடங்கு நடை முறையை மீறினரென்று நான்கு பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். அவர்களின் மோட்டார் சைக்கிள்களும் சைக்கிளும் தடுத்து வைக்கப் பட்டுள்ளன என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணி வரையி லான காலப்பகுதியிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்ட னர். மோட்டார் சைக்கிள்க ளில் பயணித்த மூவரும் சைக் கிளில் சென்ற ஒருவருமே கைது செய்யப்பட்டனர். கொரோனா வைரஸ் தொற்றை தடுக்க அரசு பல செயற்றிட் டங்களை முன்னெடுத்துள் ளது. அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொலிஸார் கோரி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-18)

# ஆசிரியர்களின் சம்மதமின்றி வேதனத்தை அறவிடாதீர்கள்

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 16

ஆசிரியர்களின் ஒருநாள் வேதனத்தை அவர்க ளின் சம்மதம் இல்லாமல் பெறவேண்டாம் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

ஆசிரியர்கள் வங்கிகளில் பெற்றுக்கொண்ட கடன்களை சில வங்கிகள் அறிவுறுத்தல்களை யும் மீறி ஏப்ரல் மாதம் அறவீடு செய்துள்ளன. இந்தவிடயம் தொடர்பில் சில திணைக்கள அதிகாரிகள் மௌனமாக இருந்தமையால் அதிபர்கள், ஆசிரியர்கள் பெரும் அசௌகரியங் களுக்கு உட்பட்டுள்ளனர். அவர்களின் கழிப்ப னவுகள் போக மிகுதியாகக் கிடைக்கும் தொகை அவர்களின் அன்றாட வாழ்க்கைக்கே போதா மல் உள்ளமை பலராலும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

எனவே அதிபர்கள், ஆசிரியர்கள் முன்வந்து செய்கின்ற உதவும் பணிகளை மதித்து அவர்க ளின் சம்மதத்துடனேயே ஒருநாள் வேதனம் பெறப்பட வேண்டும். கொரோனா நோயினால் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அபாயகர மான சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு பலரும் பல்வேறு உதவிகளைச் செய்கின்றனர்.

ஏற்கனவே பட்ட அனுபவங்களின்படி, கொடுக் கும் வசதி உள்ளவர்கள் இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவி வருகின்றனர். அவர்கள் அனைவரும் பாராட்டிற்கு உரியவர்கள் என்று சங்கம் வலியுறுத்தியுள்ளது. (த)




காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்த பங்குனி மாத மகோற்சவம் பத்தர்கள் அனுமதிக்கப்படாத நிலையில் ஆலய குருமார்களுடன் உள் வீதியில் இடம்பெற்று கடந்த வாரம் நிறைவு பெற்றது.(ஐ250)

# காற்றுடன் மழையால் வகுப்பறைகள் சேதம்

ஹற்றன்,ஏப்.16

கடுங்காற்றுடன் கூடிய மழை பெய்தமையால், நோர்வூட் நிவ்வெளி தமிழ் வித்தியாலயத்தின் வகுப்பறைகள் சேதமடைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வகுப்பறையின் கூரைத் தகரங்கள் காற்றில் அள்ளுண்டு சென்றமையால், ஒரு வகுப்பறை முழுமையாகச் சேதமடைந்துள்ளது. வித்தியாலயத்தின் அலுவலகத்திலுள்ள ஆவணங்கள் சில மழையால் நனைந்துள்ளன.

இது தொடர்பில், வலயக் கல்விப் பணிமனைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த பகுதியிலுள்ள வீடொன்றின் மீது, மரம் முறிந்து விழுந்தமையால், குடியிருப்பு பகுதி அளவில் சேதமடைந்துள்ளது. (க-114)




# புலம்பெயர் பணியாளர் பற்றி கவனம் செலுத்தும் பணியகம்

கொழும்பு, ஏப். 16

கொவிட் 19 வைரஸ் தொற்று உலகம் முழுவதும் பரவி வருவதையடுத்து, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள புலம்பெயர் பணியாளர்கள் தொடர்பில் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைவாக 16 வெளிநாட்டுத் தூதுக்குழுக்களில், தொழிலாளர் சேமநலப் பிரிவு மற்றும் நேரடியாகத் தொடர்புபட்டு, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, பணியகத்தின் தலைவர் கமல் ரத்வத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த 16 வெளிநாட்டுத் தூதுக்குழுக்கள் அமைந்துள்ள தொழிலாளர் சேமநலப் பிரிவுகளுக்கிடையில் அபுதாபி, பஹ்ரேன், சைபிரஸ், டுபாய், இஸ்ரேல், ஜோர்தான், குவைட், லெபனான் ஆகிய நாடுகளுக்குட்பட்டதாகும். இதேபோன்று மலேசியா, ஓமான், மாலைதீவு, கட்டார், ரியாத், தென்கொரியா மற்றும் சிங்கப்பூரும் இவற்றுக்கு உட்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் 24 மணிநேரமும் செயற்படும் 1989 என்ற உடனடி தொலைபேசி ஊடாக, வெளிநாடுகளில் உள்ள பணியாளர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் பெறப்படும் தகவல்களுக்கு அமைவாக, பணியாளர்கள் உள்ள நாடுகளின் தூதரகங்களில் தொழிலாளர் சேமநலப் பிரிவுக்குச் சமர்ப்பித்து, தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-114)



கலாசாரஅலுவல்கள் திணைக்களத்தால் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கலைஞர்களுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள், கலாசார உத்தியோகத்தர்களால் நேரடியாக சென்று வழங்கப்பட்டன. (க-23)

# அம்புலன்ஸ் சேவையைப் பெற முல்லையில் தகவல் மையம்

## 021 2060007 என்ற எண்ணுக்கு அழைக்கலாம்!

முல்லைத்தீவு, ஏப்.16

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்று மற்றும் அவசர சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக மேலும் ஒரு தகவல் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மாங்குளம் மலேரியா தடுப்பு பிரிவிலேயே இந்த தொலைபேசி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார்.

நாடளாவியரீதியில் அறிமுகப்படுத்தப்பட்ட அவசர அம்புலன்ஸ் சேவை தொலைபேசி இலக்கத்துக்கு மக்கள் அழைக்கும் போது அந்த அழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் நிரந்தரமாக நீக்கப்படும் வரைக்கும் மாவட்ட மட்டத்தில் ஒரு அம்புலன்ஸ் சேவையினை வழங்குவதற்கு தீர்மானித்து அதற்கான தகவல் மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நேற்றுமுதல் 24 மணிநேரமும் அது இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 0212060007 இந்த இலக்கத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நோயாளர்கள் அவசர சிகிச்சைக்காக அழைக்கலாம். அருகில் உள்ள வைத்தியசாலையில் இருந்து அன்புலன்ஸ் சென்று மருத்துவமனைக்கு கொண்டு செல்லும். இந்தத் தகவல் நிலையம் தேசிய தகவல் நிலையத்துடன், 1990 இலக்கம் கொண்ட தேசிய அம்புலன்ஸ் சேவையுடனும் இணைந்து பணியாற்றும். அவசர சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், இந்தத் தொலைபேசி இலக்கத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் அழைத்து சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-19)

# விலைக்கட்டுப்பாட்டு பிரிவினர் கிளிநொச்சியில் திடீர்ப்பாய்ச்சல்

கிளிநொச்சி, ஏப்.16

பாவனைக்குதவாத பொருள்கள் வைத்திருந்த மற்றும் அதிக விலையில் விற்பனை செய்தோர் மீது கிளிநொச்சி விலைக்கட்டுப்பாட்டு பிரிவினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அக்கராயன்குளம் மற்றும் ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் இன்று குறித்த விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஸ்கந்தபுரம் பகுதியில் விற்பனை செய்யப்பட்டு வந்த காலாவதியான பெருந் தொகை சீனி மீட்கப்பட்டதுடன், தகவலிடப்படாத பொருள்களும் அடையாளம் காணப்பட்டன.

இந்தத் திடீர்ச் சோதனை நடவடிக்கையின் போது, பொதிகளில் அச்சிடப்பட்ட விலையை விடவும் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்பட்டமையும் கண்டுபிடிக்கப்பட்டதோடு, தகவலிடப்படாத லஞ்ச் சீற்றுகள் மற்றும் உணவுப் பொதிகளும் விலைக்கட்டுப்பாட்டு பிரிவினரால் அடையாளம் காணப்பட்டன.

குறித்த வர்த்தகர்கள் மீது நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக விலைக்கட்டுப்பாட்டு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-6)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 16.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.